செய்தி வெளியீட்டு எண்–311 நாள்–16.62009

திருத்தப்பட்டது

# செய்தி வெளியீடு

## இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரைந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழக முதலமைச்சர் கலைஞர் தங்கப்பதக்கம் அணிவித்து பாராட்டு

* * * * * * * * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (16.6.2009) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரைந்து முடித்திட முனைப்புடன் செயல்பட்ட துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்அவர்களுக்கு தங்கம் பதக்கம் அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்களின் செயலர் திரு.கே.தீனபந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் செயலர் திரு.நிரஞ்சன் மார்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரண் சிங் ஆகியோருக்கும் தங்கப்பதக்கங்களை அணிவித்து பாராட்டினார்.

இத்திட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் 220 பேருக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கி கூறியதாவது :-

“ இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நிலத்தடி நீர் உப்புத்தன்மை உடையது. மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை. இராமநாதபுர மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டு வருவதால், அங்கு நிரந்தர குடிநீர் ஆதாரங்கள் இல்லாத நிலையில், தொடர்ந்து அப்பகுதியில் குடிநீர் பற்றாக்குறை இருந்துவந்துள்ளது. இராமநாதபுர மாவட்ட மக்களின் மனக்குறையை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

கலைஞர் அவர்கள், குடிநீர் பிரச்சனையினை முழுவதுமாக களைய வேண்டும் என்று உறுதி மேற்கொண்டு, இத்திட்டத்திற்கு 30.1.2007 அன்று அடிக்கல் நாட்டினார். அதன்படி திருச்சி மாவட்டம் காவிரி ஆற்றுப்பகுதியினை நீர் ஆதாரமாக கொண்டு இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பயன்பெறும் வகையில் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களின் சில பகுதிகள் பயன் பெறும் வகையிலும் இந்த மாபெரும் கூட்டுக் குடிநீர் திட்டம் மக்களின் பயன்பாட்டிற்கு 11.6.2009 முதல் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தினை மூன்று ஆண்டுகளுக்கு பதிலாக இரண்டாண்டுகளில் நிறைவேற்றி, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் தாகத்தை தீர்த்து வைத்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு பரிசளிப்பதாக முதல்வர் கலைஞர் தாயுள்ளத்தோடு, அந்த விழாவிலே அறிவித்தார்கள். “சொன்னதை செய்வோம்” என்ற தலைவர் கலைஞரின் உறுதி மொழிக்கேற்ப குறித்த கால அளவிற்கு முன்பாகவே திட்டத்தினை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர முனைப்புடன் செயல்பட்டவர்களுக்கு இன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதக்கங்களையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்துள்ளார்கள்.”

இவ்வாறு துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் திரு. வெ. மதிவாணன், முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு.நா.கி.ஜானகிராமன், நிர்வாகப் பொறியாளர் அ.பக்கிரி உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

வெளியீடு–இயக்குநர்,

செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,செ–9.